[2013 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

திரு. டி. சுரேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது செங்கம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் பணிமனை அமைப்பதற்குத் தங்களிடத்திலே ஏற்கெனவே சொல்லியிருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் அதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. அந்தப் பணிமனையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்போது கட்டிமுடித்துக் கொடுப்பார்கள் என்பதைத் தங்கள்வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் பணிமனைத் தொடங்க இப்போது திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவு பெற்று, டெண்டர் விடும் பணிகள் முடிக்கப்பட்டு, விரைவில் அந்தப் பணிமனை தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***3676—திரு. ஏ.கே.டி. ராஜா:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 மார்ச் 26]

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, வடபழஞ்சியில் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பப் பூங்காவை விரைவில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஆம். மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி, வடபழஞ்சி கிராமத்தில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் மொத்தம் 245.17 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பொது உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.14 கோடி செலவில் முடிவடைந்துள்ளன. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூ.45 கோடி இருக்கும். மேலும், இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 60 ஏக்கர் நிலம் திருவாளர்கள் எச்.சி.எல். நிறுவனத்திற்கும் 50 ஏக்கர் நிலம் திருவாளர்கள் சத்தியம் நிறுவனத்திற்கும், 5 ஏக்கர் நிலம் திருவாளர்கள் சதர்ன்லேண்டு நிறுவனத்திற்கும், 5 ஏக்கர் நிலம் திருவாளர்கள் காவிபர் பாயிண்ட் நிறுவனத்திற்கும் மற்றும் 2 ஏக்கர் நிலம் திருவாளர்கள் ஹெல்த் பிளான் சிஸ்டம் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த எல்கோசெஸ்சில் மீதம் உள்ள நிலத்தின் பரப்பளவு 66.15 ஏக்கர் ஆகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 2013 ஆம் ஆண்டுக்குள் பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைய வாய்ப்புகள் உள்ளன. அதன்மூலம் சுமார் 20 ஆயிரம் நபர்களுக்கு நேர்முகமாகவும், 40 ஆயிரம் நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா, இருக்கையில் இல்லை.